வேதாரண்யம் தாலுகாவில் கடல் ஆமை இனத்தைப் பெருக்கும் திட்டம்.

410—(*வினா எண் 19205) திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் தாலுகாவில் கடல் ஆமை இனத்தைப் பெருக்க நடவடிக்கை எடுத்து வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) வேதாரண்யம் சரகத்தில், கோடியக்கரை, ஆற்காட்டுத்துறை மற்றும் வனவன் மகாதேவி என்ற மூன்று இடங்களில் குஞ்சு பொறிக்கும் இடங்கள் (Hatcheries) அமைக்கப்பட்டு, கடல் ஆமை முட்டைகளைக் கடற்கரையிலிருந்து சேகரித்து வந்து, குஞ்சு பொரிக்கும் இடங்களில் வைத்து பாதுகாத்து, பின்னர் கடலில் விடப்படுகிறது. இத்திட்டம் அக்டோபர் 1982 முதல் மே 1983 உடன் முடிந்த காலங்களில் செயல்படுத்தப்பட்டது. 30,092 முட்டைகள் சேகரிக்கப்பட்டன. 23,538 குஞ்சுகள் பொறித்தன.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, ஆமை இனத்திலே ஓங்கல் ஆமை, பெருங்கல் ஆமை, பஞ்சல் ஆமை, எலிமூஞ்சி ஆமை என்ற பல ஆமைகள் இருக்கின்றன. இதில் எந்தவித ஆமை அங்கே வளர்க்கப்படுகிறது? கடலோரப் பகுதிகளிலே வாழ்கிற மக்கள்தான் ஆமை சாப்பிடுகிறார்கள். தமிழ் நாட்டிலே உள் பகுதியிலே இருக்கிற மக்கள் ஆமை கறி சாப்பிடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ? ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது என்று சொல்வார்கள். வேதாரண்யத்திலே ஏற்கனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, அங்கே ஆமை புகுந்தால் நல்லதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல வேளையாக இந்த ஆமை இந்த மனிதர்கள் இருக்கிற பக்கம் தலை வைத்து படுப்பது இல்லை. ஏன் என்றால் மனிதர்களைக் கண்டால் அவ்வளவு பயம். இது கடல் ஆமை. ரெட்லி என்று சொல்லப்படுகிற ஒரு வகையான கடல் ஆமை. இது கடலில் ஒரு மிகச் சிறந்த இனமாக உயிர் இனமாக கருதப்படுகிறது. இதை இந்த மனிதர்கள் கண்ணில் படுகிறபோது இவர்கள் அடித்து தின்ன ஆரம்பித்த பிறகு இதனுடைய தொகை குறைந்து கொண்டே வருகிறது. செப்டம்பர் மாதத்திலிருந்து மார்ச் மாதத்

1984 மார்ச் 23]

திற்குள் இருக்கிற அந்த பருவ காலத்தில் இது குஞ்சு பொறிப் பதற்காக முட்டை இடுவதற்குத்தான் கரைக்கு வருகிறது. இந்த தரையில் இதைக் கண்டால் அடித்து கொல்கிறவர்கள் இருக் கிறார்கள் என்று அந்த ஆமைக்குத் தெரியாது. ஆகவே இந்த கரையில் முட்டையிடுவதற்கு வருகிற போது நாம் அதை விட்டு வைக்கவில்லை. அதை கொன்று சாப்பிடுகிறோம். இந்த முட்டையை எடுத்துக்கொண்டு போய் இது கோழி முட்டை என்று சொல்லி விற்று சாப்பிடுகிறோம். வருமானம் சம்பாதிக் கிறோம். ஆகவே இந்த சூழ்நிலையினால் கடலில் அப்படிப் பட்ட ஒரு அபூர்வமான இனம் குறைந்து கொண்டே வருகிறது என்று உலகம் முழுவதும் இதை கருதி நம்முடைய கடற்கரையில் இது அதிகமாக இருக்கிறது. இதை காப்பாற்றவேண்டும் என்று மத்திய அரசு, மாநில அரசும் முயற்சி எடுத்து தான் இந்த திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. அதிலே நமது மாநில அரசின் முயற்சிகள் மிகுந்த அளவில் பாராட்டப்பட்டு வருகிறது. இந்திய பிரதமர் அவர்கள் இதிலே மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள். அப்படி யாராவது இந்த கடலில் உள்ள ஆமையை பிடித்து தின்றாலோ அல்லது முட் டையை கொண்டு வந்தாலோ கடுமையான தண்டனை அளிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் நாம் இதிலே மிக சிறந்த வெற்றியை பெற்று வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் பயப்படவேண்டாம். இந்த ஆமை புகுந்த வீடு என்பது தரையில் இருக்கிற ஆமை. தரையில் இருக்கிற ஆமை இந்த மனித இனத்தோடு சேர்ந்த ஆமை. இது பாவம், கடல் ஆமை.

வள்ளுவர் கோட்டத்தை விரிவுபடுத்தி திருக்குறள் ஆராய்ச்சிக் கூடம் அமைக்கும் திட்டம்.

411—(*வினா எண் 19493) திரு. கு. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை வள்ளுவர் கோட்டத்தை விரிவுபடுத்தி அங்கு திருக்குறள் ஆராய்ச்சிக்கூடம் அமைக்கும் யோசனை அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகிலமெல்லாம் அன்னை தமிழுக்கு பெருமை சேர்க்க வெளிநாட்டு பயணிகள் எளிதில் திருக்குறளை புரிந்து தமிழின் சிறப்பை புரிந்து கொள்ள வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் போதனைக் கூடம் ஒன்றை அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.